புலமைக்கதிர் 5

புலமைப் பரிசில் பரீட்சைக்கான வழிகாட்டி

-- தாய்மொழி -- நேரம்:- 01 மணி

01. பின்வரும் கவிதையை வாசித்து தரப்பட்டுள்ள வினாவிற்குரிய சரியான விடையின் கீழ்க் கோடிடுக.

மனதில் உறுதி வேண்டும்
உடலில் வலிமை வேண்டும்
சோம்பலை விலக்கிட வேண்டும்
நாட்டுக்கு உழைக்க வேண்டும்.

1. இக் கவிதை தரும் முழுமையான செய்தி யாது?
   1. சோம்பலை அகற்றிடுக.
   2. கடுமையாக வேலை செய்திடுக
   3. நாட்டுக்குப் பெறுமதியுடையவனாகுக.

2. இக் கவிதையின் படி நாட்டுக்காக உழைக்கும் ஒருவரிடம் இருக்கத்தக்க இரு இயல்புகளாவன
   1. மனதில் உறுதியும் வேலையில் சோம்பலின்மையும்
   2. மனதை முன்னேற்றுதலும் உடலை வளர்த்தலும்
   3. மனதை உறுதிப்படுத்தலும் உடலை வளர்த்தலும்

02. கவிதையை வாசித்து வினாக்களுக்கு விடை எழுதுக.

பார்த்தாலும் நல்ல ஆசையை உண்டாக்கும்
கண்களைச் சிமிட்டும் தலையாட்டும்
அம்மா சந்தையிலிருந்து கொண்டு வந்த
அழகு மிக்க பொம்மை.

1. பொம்மையைக் கொண்டு வந்து தந்தவர் யார்? எங்கேயிருந்து?
   1. அம்மா, சந்தையிலிருந்து
   2. அம்மா, கடையிலிருந்து
   3. அப்பா, சந்தையிலிருந்து

2. பொம்மையின் இரு இயல்புகள்
   1. கண்களைச் சிமிட்டுதல், கைகளை ஆட்டுதல்
   2. தலையை ஆட்டுதல், கண்களைச் சிமிட்டுதல்
   3. ஆடுதல், தலையை ஆட்டுதல்

www.lkedu.lk

திரு. க. சந்திரகுமார். (0778888670) --- ஆசிரிய ஆலோசகர், வவுனியா வடக்கு. ---

03. தரப்பட்டுள்ள சொற்களுக்கு ஒத்தகருத்துச் சொல் எழுதுக.

1. வானம் .....
2. துயில் .....
3. உண்மை .....
4. வயல் .....
5. செய்தி .....
6. அரவம் .....
7. தூய்மை .....
8. சரீரம் .....
9. வையகம் .....
10. கேள்வி .....

04. தரப்பட்டுள்ள சொற்களுக்குப் பொருத்தமான ஒத்தகருத்துச்சொல்லை அடைப்புக்குள் இருந்து தெரிவு செய்து கோடிடுக.

1. பணிவு ..... (அடக்கம் / அலட்சியம்)
2. விலாசம் ..... (முத்திரை / முகவரி)
3. நூல்கள் ..... (பனுவல்கள் / பதில்கள்)
4. கானகம் ..... (பூஞ்சோலை / காடு)
5. அருணன் ..... (கதிரவன் / திங்கள்)
6. வதனம் ..... (நயனம் / முகம்)

05. கீழே தரப்பட்டுள்ள வாக்கியங்களில் வெற்றிடத்துக்குப் பொருத்தமான விடையை அடைப்புக்குள் இருந்து தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.

1. அவை வரிசையாகச் சென்றன. இங்கு அவை என்பது
..... (படர்க்கைப் பன்மை / படர்க்கை ஒருமை)

2. நாங்கள் அனைவரும் விரைவாக எழுதுவோம். இங்கு எழுதுவோம் என்பது
..... (தன்மைப் பன்மை / படர்க்கைப் பன்மை) சொல்லாகும்.

3. நான் நேற்று பாடசாலைக்கு வரவில்லை. இங்கு நான் என்பது
..... (தன்மை ஒருமை / முன்னிலை ஒருமை) சொல்லாகும்.

திரு. க. சந்திரகுமார். (0778888670) --- ஆசிரிய ஆலோசகர், வவுனியா வடக்கு. ---

06. அடைப்பினுள்ளே இருக்கும் சொற்களை மாத்திரம் பயன்படுத்திச் சரியான கருத்துள்ள மூன்று வாக்கியங்களை எழுதுக. ஒவ்வொரு வாக்கியத்திலும் நான்கு சொற்கள் இடம்பெற வேண்டும். ஒரு சொல்லை ஒரு தடவை மாத்திரம் பயன்படுத்துக.

அம்மா தங்கை நான் நண்பன் துலக்கினான் வந்தேன்
சமைத்தாள் செய்தாள் உணவு பாடங்களை பல ஆயத்தம்
உலாவி எனது பாடசாலைக்கு இரவில் விடியற்காலையில்
நேற்று கவி தமிழ் புத்தகத்தில் பை முந்தநாள் வேலை

1. .....

2. .....

3. .....

4. .....

07. அடைப்பிலுள்ள சொற்களை மட்டும் பயன்படுத்திச் சரியான கருத்துள்ள நான்கு வாக்கியங்கள் எழுதுக. (ஒவ்வொரு வாக்கியத்திலும் நான்கு சொற்களாவது இடம்பெறுதல் வேண்டும்).

பெற்றோர் மரங்கள் சனிக்கிழமை பார்ப்பதற்கு சித்திரங்கள் கீழே சென்றார்
மாணவர்கள் போனோம் பார்க்க ஆசிரியை சென்று கரை பிள்ளைகள் குளம்
பார்த்தனர் நாம் சீகிரியா அமர்ந்தனர் நிழலில்

1. .....

2. .....

3. .....

4. .....

www.lkedu.lk

08. கீழே தரப்பட்டுள்ள வாக்கியங்களை வாசித்து கேட்கப்பட்டுள்ள வினாக்களுக்கு புள்ளிக்கோட்டில் விடை எழுதுக.

1. நீ மிகவும் கெட்டிக்காரன்.

2. அவள் இனிமையாகப் பாடல் பாடினாள்.

3. நாங்கள் அனைவரும் புகையிரதத்தில் செல்வோம்.

4. அவை பறந்து திரிகின்றன.

5. மாணவர்கள் மைதானத்தில் விளையாடுகின்றார்கள்.

1. முன்னிலை ஒருமை பெயர்ச்சொல்: - .....

2. தன்மை பன்மை வினைச்சொல்: - .....

3. படர்க்கை ஒருமை பெயர்ச்சொல்: - .....

4. படர்க்கை உயர்திணை பன்மை பெயர்ச்சொல்: - .....

5. தன்மை பன்மை பெயர்ச்சொல்: - .....

09 பின்வரும் கூற்றுக்கள் சரியாயின் ''சரி"" எனவும், பிழையாயின் ''பிழை"" எனவும் அடைப்பினுள் எழுதுக.

1. 'நான் என்பது தன்மை பெயர்ச்சொல் ஆகும். (.....)

2. 'சென்றன" என்பது படர்க்கை பன்மை பெயர்ச்சொல் ஆகும். (.....)

3. 'பசுக்கள்" என்பது படர்க்கை பன்மை பெயர்ச்சொல் (.....)

4. 'வந்தீர்கள்" என்பது முன்னிலை பன்மை வினைச்சொல் ஆகும். (.....)

5. 'நீ" என்பது முன்னிலை ஒருமைச்சொல்லாகும். (.....)

10. கீழே தரப்பட்டுள்ள வாக்கியத்தில் வெற்றிடத்துக்குப் பொருத்தமான விடையை அடைப்புக்குள் இருந்து தெரிவு செய்து, அதன் கீழ்க் கோடிடுக.

1. உயிர்மெய் எழுத்துக்கள் ..... (இருநூற்றுப் பதினாறு / இருநூற்று நாற்பது ஏழு) ஆகும்.

2. ஒலிம்பிக் போட்டியில் இலங்கைக்கு முதன் முதலில் பதக்கம் பெற்ற வீராங்கனை ..... (தமயந்தி தர்க்ஷா /சுசந்திகா ஜெயசிங்க) ஆவார்.

திரு. க. சந்திரகுமார். (0778888670) --- ஆசிரிய ஆலோசகர், வவுனியா வடக்கு. ---